கடலோரத்துச் சிறுவன்
--------------------------------------
ஒவ்வொரு சொல்லும் ஒரு கடல்.
அலைகளின் ஓங்காரத்துக்குள் ஒளிந்திருக்கிறது
ஒரு சூன்யம்.
சிவப்புச் சாராயம் நிரம்பிய
ஒரு கண்ணாடி மதுக் கோப்பை ,
நண்பனின் முதுகில் பாய்ச்சி எடுத்த
குருதி தோய்ந்த ஒரு குறுவாள் ,
புரட்டி புரட்டி அடிக்கோடிட்டு
பலமுறை படித்த ஒரு பழைய புத்தகம் –
எல்லா குறியீடுகளுக்குள்ளும்
ஒரு கடல் காத்திருக்கிறது.
அநாதையாக்கப்பட்ட பாதச்சுவடுகள்
ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லி.
நானோ கடலோரத்தில் கிடைக்கும்
குறியீடுகளின் கிளிஞ்சல்களை மட்டுமே
பொறுக்கிக் கொண்டு வீடு திரும்பும்
கடலோரத்துச் சிறுவன்.
4 பிப்ரவரி 2018v